Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 61

திங்கட்கிழமை
26 ஜனவரி 2026

தை 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## செவ்வந்தியின் தடுப்புக்காவல் நீடிப்பு

கொழும்பு, ஜன.26
பாதாள உலகக்குழு உறுப்பினரான கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தியை மேலும் 90 நாள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.
கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் அண்மையில் இந்த வழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேகநபரான இஷாரா செவ்வந்திக்கு எதிராக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த 90 நாள்களுக்கான தடுப்புக்காவல் உத்தரவு இந்த மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது என்று கொழும்பு குற்றத்த

»11

### எல்லை நிர்ணயத்தை ஆராயப் புதிய குழு

# மாகாணசபைத் தேர்தல் சாத்தியமற்றதாக மாறும்

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.26**
**எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்காக மீண்டும் ஒரு குழு நியமிக்கப்பட்டால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகிவிடும் என்று எல்லை நிர்ணயக் குழுவின் செயலாளரும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகமுமான சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

»11



## பிரதி அமைச்சரின் பெயரால் மோசடி!

கொழும்பு, ஜன.26
கைத்தொழில் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்கவின் பெயரைப் பயன்படுத்தி பணமோசடி மேற்கொள்ளப்படுவது தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பிரதி அமைச்சரின் பிரதிநிதி எனக் கூறி பொது மக்களிடம் நிதி உதவி கோருவதாகவும், தனிப்பட்ட தகவல்களைத் திரட்டு

»11

## ஆழ்கடலில் சிக்கிய படகுகள் கரைக்கு!

கொழும்பு, ஜன.26
தென்னிலங்கை ஆழ்கடலில் வைத்து பெருமளவான போதைப்பொருள்களுடன் கைபற்றப்பட்ட இரு மீன்பிடிப் படகுகள் நேற்று திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.
இலங்கைக் கடற்படையினரும், பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையில் முதலில் 5 சந்தேகநபர்களுடன் ஒரு படகு கைப்பற்றப்பட்டது.
அதன்பின்னர் அதே கடற்பரப்பில் தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் போதைப்பொருள்களுடன் 6 சந்தேநபர்களைக்

»11

## கிவுல் ஓயாத் திட்டம்; எதிராகப் போராட்டம்

### தமிழ்க் கட்சிகள் ஆலோசனை

வவுனியா, ஜன.26
வவுனியா வடக்கில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவுள்ள கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஆலோசித்துள்ளன.
வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக இடங்களைக் கையகப்படுத்தி பெரும் செலவில் கிவுல் ஓயாத் திட்டத்தை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

»11

## மாகாணசபைத் தேர்தலை விரைந்து நடத்தவேண்டும்

### சுவிஸ் தூதுவர் வலியுறுத்து

கொழும்பு, ஜன.26
இலங்கையில் நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டுவரும் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்துத் தூதுவர் சிறி வோல்ட் வலியுறுத்தியுள்ளார்.

விரிவு 05 ஆம் பக்கம்

## கிவுல் ஓயாத் திட்டத்தில் இன, மத நோக்கமில்லை

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26
கிவுல் ஓயாத் திட்டம் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள அமைச்சர் இ.சந்திரசேகர், இந்தத் திட்டம் இன அல்லது மத அடிப்படையிலான நோக்கங்களுடன் முன்னெடுக்கப்படுகின்றது என்று கூறப்படுவது முற்றிலும் தவறானது என்றும் தெரிவித்துள்ளார்.

»11

## நாடாளுமன்றப் பிரதி செயலாளரை பதவிநீக்கியமை முறையற்ற செயல்

### சன்ன ஜயசுமன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.26
நாடாளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் பதவியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.
நாடாளுமன்தின் பிரதிச் செயலாளர் நாயகம் ஜி.கே.ஏ.சமிந்தகுமார குலரத்னவை உடனடி

»11



“அவைக்கு தாங்கள் செய்யிறதெல்லாம் நல்லதிட்டம் மற்றவை செய்ததுதான் கூடாத திட்டம் கண்டியளோ”

முச்சந்தி முரளி

### இன்று முதல் நாடுமுழுதும் மீண்டும்

## மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, ஜன.26
நாடாளாவிய ரீதியில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் இன்று முதல் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் மீள ஆரம்பிக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

»11

## அதீத அதிகாரத்தை வழங்கும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம்

கொழும்பு, ஜன.26
தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டுவரப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பாதுகாப்புத் தரப்பினருக்கு அதீத அதிகாரங்களை வழங்கும் ஒரு கருவியாகவே உள்ளது என்று சுட்டிக்காட்டிக்கப்பட்டுள்ளது.

விரிவு 02 ஆம் பக்கம்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|
| திகதி 25.01.2026 | திகதி 25.01.2026 | திகதி 25.01.2026 | திகதி 25.01.2026 | திகதி 25.01.2026 | திகதி 25.01.2026 | திகதி 25.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4327 | சீட்டிழுப்பு இலக்கம் 1394 | சீட்டிழுப்பு இலக்கம் 0353 | சீட்டிழுப்பு இலக்கம் 2433 | சீட்டிழுப்பு இலக்கம் 6085 | சீட்டிழுப்பு இலக்கம் 2115 | சீட்டிழுப்பு இலக்கம் 0201 |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கினம் கடகம் | ஆங்கில எழுத்து N | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து Z | ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் சிம்மம் |
| | | | சுப்பர் இலக்கம் 15 | | | |
| வெற்றி இலக்கங்கள் 02 10 24 45 | வெற்றி இலக்கங்கள் 18 24 35 58 | வெற்றி இலக்கங்கள் 4 1 8 9 | வெற்றி இலக்கங்கள் 25 29 36 78 | வெற்றி இலக்கங்கள் 8 4 2 6 8 1 | வெற்றி இலக்கங்கள் 06 31 54 81 | வெற்றி இலக்கங்கள் 19 54 62 |
| விசேட எழுத்து X | | | | | விசேட எழுத்து T | |

# புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் ஆயுதம் ஏந்தியோருக்கு அதிகாரம்

## அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டு!

**யாழ்ப்பாணம்,ஜன.26**

**தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டு வரப்படவுள்ள 'அரசைப் பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கும் சட்ட வரைவு', மீண்டும் பாதுகாப்புத் துறையினருக்கு அதீத அதிகாரங்களை வழங்கும் ஒரு கருவியாகவே அமைந்துள்ளது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கு சிவில் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெற்ற சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் தூதரக அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், 'பயங்கரவாதம்' என்றால் என்ன? என்பதற்குச் சரியான விளக்கம் இந்தச் சட்டத்தில் இல்லை. இதனால் பாதுகாப்புத் தரப்பினர் தங்களுக்குத் தேவையான அர்த்தத்தில் எவரையும் கைது செய்யும் அபாயம் உள்ளது.

தடைசெய்யப்பட்ட இடங்களை அறிவிக்கும் அதிகாரம் ஜனாதிபதியைத் தாண்டி அமைச்சின் செயலாளருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது நீதித்துறையை பலவீனப்படுத்தி நிர்வாகத் துறையை பலப்படுத்தும் செயலாகும்.

ஆயுதம் தாங்கிய படையினர் எவரையும் கைது செய்யலாம் என்ற நிலை தொடர்கிறது. கைது செய்யப்படும் நபர் 24 மணித்தியாலங்கள் அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது, அவரின் பாதுகாப்புக் குறித்த பலத்த சந்தேகம் எழுகிறது.

ஒரு நபர் குற்றம் செய்யப்போகிறார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே கைதுசெய்யப்படலாம் என்பதால், இது ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களை முடக்கும் உத்தியாகவே அமையும்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் என்று உறுதியளித்த தற்போதைய அரசாங்கம், ஓராண்டு கடந்த நிலையிலும் அதனைச் செய்யவில்லை. பெயரில் மாற்றங்களைச் செய்தாலும், அடிப்படை மனித உரிமை மீறல்களைப் புரியகூடிய சரத்துகள் புதிய வரைவிலும் நீடிக்கின்றது.

புதிய சட்டத்தின் கீழ் நீதிமன்றம் பிணை வழங்கமுடியுமே தவிர, ஒருவரை வழக்கிலிருந்து முழுமையாக விடுவிக்கும் அதிகாரம் அற்ற நிலையிலேயே நீதித்துறை வைக்கப்பட்டுள்ளது. இது சித்திரவதை மூலம் பெறப்படும் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு நீண்டகாலம் சிறையில் வாடும் நிலையை உருவாக்கும்- என்றார். (ச-27)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | வெற்றி வாரம் 0793 |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 2 5 9 6 3 6 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 3059 | ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 09 41 53 61 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 29 33 54 73 | வெற்றி வாரம் 5220 |

| SASIRI | | |
|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| வெற்றி வாரம் 889 | வெற்றி இலக்கம் 02 20 35 | |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் 28 33 53 55 | சீட்டிழுப்பு வாரம் 4771 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து M | சுப்பர் இலக்கம் 29 | வெற்றி இலக்கம் 17 29 34 48 | வெற்றி வாரம் 2235 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 25.01.2026 | தினம் ஞாயிற்றுக்கிழமை | |
| ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 45 46 48 53 | வெற்றி வாரம் 2885 |

# மானிப்பாய் சபை அமர்வில் கணக்கறிக்கையால் அமளி!

## சபையினுள்ளே பறந்த அறிக்கை



யாழ்ப்பாணம்,ஜன.26

மானிப்பாய் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது கணக்கறிக்கை தொடர்பான விவாதத்தில் ஏற்பட்ட முரண்பாடு ஒரு கட்டத்தில் அறிக்கையைத் தூக்கி வீசும் நிலைக்குச் சென்றுள்ளது.

தவிசாளர் ஜெசீதன் தலைமையில் ஆரம்பமான மாதாந்த அமர்வில், சபையின் வரவு - செலவு தொடர்பான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அப்போது எழுந்த உறுப்பினர் நா.பகீரதன், "கணக்கறிக்கையைச் சபையில் சமர்ப்பிக்கும் போதே கையில் கொடுத்தால், அதில் உள்ள குளறுபடிகளை எப்படி ஆய்வு செய்வது?" என்று கேள்வியெழுப்பினார். கூட்டம் தொடங்குவதற்கு சில நாள்களுக்கு முன்பே அறிக்கை வழங்கப்படவேண்டும் என்ற ஜனநாயகப் பண்பு மீறப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். இதன்போது உறுப்பினரின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்த தவிசாளர் ஜெசீதன் , "அறிக்கையைச் சபையில் முன்மொழிந்து வழிமொழிந்தாகிவிட்டது. தவறு இருந்தால் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்க வேண்டும். நடைமுறைகள் முடிந்த பின்னர் விமர்சிப்பது ஏற்கத்தக்கதல்ல" எனத் தெரிவித்தார். தவிசாளரின் பதிலைத் தொடர்ந்து இருவருக்கும் இடையே கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டு வாதங்கள் முற்றி தனிநபர் விமர்சனங்களாக மாறி ஒரு கட்டத்தில் ஆவேசமடைந்த உறுப்பினர் நா.பகீரதன், தனது மேசையில் இருந்த கணக்கறிக்கையை ஆவேசமாக எடுத்து சபையின் நடுவே தூக்கி வீசினார். இதனால் சபையில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது. (ச-27)

# இலங்கைச்சிறையிலுள்ள மீனவர்களை விடுவியுங்கள்

## பாம்பனில் மீனவர்கள் போராட்டம்

சென்னை, ஜன.26

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, சிறைகளில் வாடும் தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்கக் கோரி அவர்களது உறவினர்கள் நேற்றுக்காலை சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 2025 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி, பாம்பன் தெற்குவாடி மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற 10 மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்தனர் எனக் கூறி கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கடந்த சில மாதங்களாக நீதிமன்ற உத்தரவின் பேரில் இலங்கைச் சிறையில் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். தமது உறவினர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. என தெரிவித்து அவர்களின் விடுதலையை வலியுறுத்தி நேற்றுக் காலை பாம்பன் பேருந்து நிலையம் முன்பாக மதுரை- தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். (ச-இ)

# ஐ.ம.சக்தி –ஐ.தே.கட்சி இணைவுப் பேச்சு வெற்றி

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.26

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியற்றுக்கு இடையே நேற்று இடம்பெற்ற மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக அமைந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது 'எக்ஸ்' சமூக வலைதளப் பக்கத்தில் இட்டுள்ள பதிவில்,

இந்தப் பேச்சுகள் ஒரு வெற்றிகரமான முடிவை எட்டும் என தான் நம்புகிறேன்-என்றார்.

இரு தரப்பினருக்கும் இடையே இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் ஐக்கியதேசியக்கட்சிசார்பில்ருவன் விஜயவர்த்தன, தலதா அத்துக்கோரள,நவீன் திஸாநாயக்க, அகில விராஜ் காரியவசம் மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர். எதிர்வரும் காலத்தில் அரசியல் நகர்வுகள் மற்றும் தேர்தல் கூட்டணிகள் குறித்த எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில், இரு தரப்புக்கும் இடையிலான இந்த இணக்கப்பாட்டு முயற்சிகள் அரசியல் களத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உள்ளூராட்சி அதிகாரத்தினுள் 'பிரஜாசக்தி'க்கு இடமில்லை!

## சாவகச்சேரிப் பிரதேசசபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம்,ஜன.26**

**உள்ளூராட்சிசபைகளின் சுயாதீனமான செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் செய்யப்படுவதை அனுமதிக்கமுடியாது எனச் சாவகச்சேரிப் பிரதேசசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

சாவகச்சேரிப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நடைபெற்றபோது, 'பிரஜாசக்தி' என்றபெயரில் கிராமந்தோறும் உருவாக்கப்பட்டு வரும் அமைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த அமைப்பானது சுயலாப அரசியல் உள்நோக்கோடு உருவாக்கப்படுவதாகவும், சபையின் சுயாதிபத்தியத்தில் இது தேவையற்ற தலையீடுகளை ஏற்படுத்துவதாகவும் உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேசசபையின் நிதி மற்றும் நிர்வாக விடயங்களில் 'பிரஜாசக்தி' அமைப்பினால் முன்வைக்கப்படும் எந்தவிதமான சிபார்சுகள், முன்மொழிவுகள் அல்லது ஆலோசனைகளைச் சபை முற்றாக நிராகரிக்கிறது.

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்திற்குப் புறம்பான எந்தவொரு தலையீடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனத்தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின்போது, சபையில் உள்ள 20 தமிழ்க்கட்சிகளின் உறுப்பினர்கள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் 5 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். அதற்கமைய பெரும்பான்மை ஆதரவுடன் இந்தத் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது. (ச-159)

## மின்சாரசபை மறுசீரமைப்பு இறுதிக்கட்டம்

கொழும்பு, ஜன.26

இலங்கை மின்சாரசபையை நவீனமயப்படுத்தும் மற்றும் நஷ்டத்திலிருந்து மீட்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்புத்திட்டம் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக மின்சாரசபை தெரிவித்துள்ளது.

ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் நிலவும் பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதித்த பின்னரே இந்த மறுசீரமைப்புத்திட்டம் முழுமையாகச் செயற்படுத்தப்படும்.

மின்சாரத்துறையின் வளர்ச்சியும், அதன் நிலைப்புத்தன்மையும் ஒரு தேசியத் தேவை.

இந்தத் திட்டத்தின்மூலம் மின்சாரசபையின் நிர்வாகத் திறன் அதிகரிக்கப்படும். வெளிப்படையான விலை நிர்ணய முறைகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## கோர விபத்து ஒருவர் பலி!

கொழும்பு, ஜன.26

தெற்கு அதிவேக வீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற கார் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். கொழும்பில் இருந்து மத்தல நோக்கிப் பயணித்த கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியின் இடதுபுறத்திலிருந்த பாதுகாப்புவேலியில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

காரில் பயணித்த 30 மற்றும் 36 வயதுடைய இரு ஆண்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச)

## வெசாக் பண்டிகை மே 30 இல் இம்முறை



கொழும்பு, ஜன.26

2026ஆம் ஆண்டுக்கான வெசாக் பண்டிகை மே மாதம் 30ஆம் திகதி கொண்டாடப்படும் என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தீர்மானம் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர். ச. சந்தன அபேரத்ன, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

மே மாதம் முதலாம் திகதி வெசாக் பூரணை தினமாக இருந்தாலும், அன்றைய தினம் சுபமுகூர்த்த நேரங்கள் இல்லை என மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினர். அதன்படி, 2026ஆம் ஆண்டுக்கான அரச வெசாக் பண்டிகை மே மாதம் 30ஆம் திகதி மிகவும் விமர்சையாக நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## போதைப்பொருள் பாவனை 480 வாகனச் சாரதிகள் கைது

கொழும்பு, ஜன.26

2026ஆம் ஆண்டின் முதல் 22 நாள்களில் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் 480 வாகனச்சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 135 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன.

இந்த விபத்துகளால் 15 சாரதிகளும், 50 பாதசாரிகளும் உயிரிழந்துள்ளனர். சாரதிகள் அனைவரும் தங்களது பயணிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யவேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## புலுனியும் புளுகுமூடையும்

சீதையை மீட்கிறதுக்காக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில இராமர் பாலம் போடேக்க, ஒண்டுமே செய்யாத புலுனி என்ட பறவை கடைசியில தன்ர மேலில மண்ணைப் பூசிக்கொண்டு வந்து "பாருங்கோ. நானும் பாலம் போடுறன்" எண்டு மார்தட்டினதாம். இப்ப வடமராட்சிக் கிழக்குச் செம்பியன்பற்றுப் பக்கம் நடக்குற கூத்தைப் பார்த்தால், அந்தப் புலுனியின்ர ஞாபகம் தான் வருகுது.

செம்பியன்பற்று வடக்கு வீதிக்கு எத்தினையோ மாமங்கத்துக்குப் பிறகு இப்பத்தான் ஒரு வழியா விமோசனம் கிடைச்சமாதிரி திருத்தப்படுது. இனித் தங்கட போக்குவரத்துக் கஷ்டம் தீர்ந்திடும் எண்டு அங்கத்தைச் சனங்கள் சந்தோசத்தில இருக்கினம். பருத்தித்துறை பிரதேசசபை தன்ர நிதியில, முறையாத் தீர்மானம் போட்டு, கேள்வி கோரல் எல்லாம் முடிச்சு இப்ப வேலையைத் தொடங்கியிருக்கு. சபைத்தவிசாளர் முன்னுக்கு நிண்டு எல்லாத்தையும் கவனிச்சுக்கொண்டிருக்கிறார்.

விசயம் இப்பிடி இருக்கேக்க, எங்கையிருந்து வந்தினமோ தெரியேலை. நாலைஞ்சு நாளுக்கு முதல் திசைகாட்டியின்ர 'இணைப்பாளர்கள்' எண்டொரு 'ரீம்' திடீரெண்டு அந்த வீதிக்குள்ள இறங்கிச்சுது. வந்தவை சும்மா இருக்காமல், ரோட்டுக்கு முன்னால நிண்டு 'சீன்' காட்டி, பல கோணங்களில போட்டோக்களை எடுத்துக்கொண்டு பறந்திட்டினம். கொஞ்ச நேரத்தில அவையின்ர பேஸ்புக்கைத் திறந்து பார்த்தால் "திசைகாட்டி எம்.பி.யின்ர ஆணைக்கு இணங்க, நெடுஞ்சாலை அமைச்சின்ர காசில இந்த வீதி திருத்தப்படுது" எண்டு ஒரு போஸ்ட்டைப் போட்டுப் புளுகுமூடையை அவிட்டுக் கொட்டியிருக்கினம்.

என்னடாப்பா இது கொடுமை! பிரதேசசபையின்ர காசில செய்யிற வீதிப்புனரமைப்பை வைச்சு, திசைகாட்டிக்காரர் 'இரவல் சேலையில கொய்யகம்' போடப் பாக்குறதை என்னெண்டு சொல்லுறது? பருத்தித்துறை பிரதேசசபை கஷ்டப்பட்டு ஒதுக்குகிற காசில, தங்களுக்குத் தாங்களே பேரும் புகழும் தட்டிக்கொண்டு' போறது தான் இவையின்ர புது அரசியலோ? உண்மையிலேயே இவையளுக்குப் பேரும் புகழும் கிடைக்கோணும் எண்ட ஆசையிருந்தால் மருதங்கேணியில இருந்து பருத்தித்துறை வரைக்கும் சிதைஞ்சு போய்க் கிடக்கிற மெயின் ரோட்டைத் திருத்திப்போட்டுப் அதைப் போட்டோ எடுத்துப் போடலாமே? அரசியல்ல முண்டியடிச்சுப் பேர் வாங்குறதுக்கு ஒரு அளவு இருக்கு. ஆனால் இப்பிடி ஊருக்கே தெரிஞ்ச விசயத்துல 'புலுனி' மாதிரி மண்ணைப் பூசிக்கொண்டு வர்றது யாழ்ப்பாணச் சனத்திட்ட எடுபடாது கண்டியளோ! அடுத்தவன்ர உழைப்பில அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு பேர் எடுக்கிறத விட்டிட்டு, உருப்படியா ஏதும் வேலையைச் செய்யப் பாருங்கோவன்!

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTHERN LANKA DAIRY FARM & AGRO VENTURES (PVT) LTD

## வட இலங்கை பால் பண்ணை மற்றும் வேளாண் முயற்சி (தனியார்) நிறுவனம்

|No.12, New Kachcheri road (50m Close to A9 Road) Kilinochchi|
Admin – 0217143445, Managing Director - 0217143447
Email - northernlankadairy@gmail.com

Reg: PV00340799

## IMMEDIATE JOB VACANCY

**Northern Lanka Dairy Farm & Agro Ventures (Pvt) Ltd**
**Published on: 26.01.2026**

Northern Lanka Dairy Farm and Agro Ventures (Pvt) Ltd is a registered organization based its regional head office in Kilinochchi and established in 2025. The main objective of the organization is developing Dairy sector & Agro Ventures in the Northern Region of Sri Lanka by ensuring investment of eligible shareholders (Investors) from both of local and abroad.

**New Staff Recruitment for Eight (8) Branch Offices**

**1. In Jaffna District**

There are five (5) Branch Offices of the company would be established this year (2026) in the Jaffna District and for those branches, particular staff are going to be recruited as listed below.

**A. JAFFNA MAIN BRANCH (TOWN), CHUNNAKAM BRANCH, MANIPPAI BRANCH, NELLIADY BRANCH AND CHAVAKACHCHERI BRANCH.**

**i. Regional Investment Promoting Manager (RIPM) – 01**

Required Educational Qualification: Degree Holder in Commerce and Management or Higher studies in Business Management AND
Expected working Experience: Minimum 5 years in the related field.
Salary scale: Rs. 450,000.00 per month.
Basic – 130,000/-, Allowance –
(For Vehicle - 200,000/-, For Fuel - 120,000 /-)
(Business Target is under conditions)

**ii. Branch Manager (BM) or Investment Promoting Manager (IPM) – 05**

Required Educational Qualification : Degree Holder in Commerce / Management or Diploma in Business Management OR
Experience : Minimum 05 Years working experience at Managing Level at any institution or company.
Salary Scale (Per BM): Rs. 350,000.00 Per Month
Basic - 85,000/-, Allowance -
(For Vehicle – 150,000/-, For Fuel - 115,000/-)
(Business Target is under conditions)

**iii. Accountant – 05**

Required Educational Qualification : Degree Holder in Commerce or Diploma in Accounting.
Expected working Experience : Minimum 3 years in the related field.
Salary Scale : Rs. 65,000.00 Per Month
Basic : 52,500/- , Travel Allowance - 12500/-

**iv. Admin Officer – 05**

Required Educational Qualification : Diploma in Administration or Advanced Level.
Expected working experience : Minimum 2 years experience
SalaryScale : Rs. 57,500.00 Per Month
Basic : 45,000/- , Travel Allowance - 12,500/-

**v. Human Resource Officer (HR Officer) – 05**

Required Educational Qualification : Diploma In HR Management or related field.
Expected working experience : Minimum 3 Years experience
Salary Scale : Rs. 75,000.00 Per Month
Basic : 62,500/- Travel Allowance : 12,500/-

**vi. Office Assistant – 10**

Required Educational Qualification : Advanced Level Completion
Salary Scale : Rs. 52,500.00 Per Month
Basic : 40,000/- Travel Allowance : 12,500/-

**vii. Investment Promoting Group Leader (IPGL) – 10**

Required Educational Qualification : Advanced Level Completion or above.
Experience : Minimum two years experience at the marketing strategy.
Salary Scale : Rs. 165,000.00 Per Month
Basic – 47,500/- , Allowance: (for Vehicle- 80,000/- For Fuel – 37500/-)
(Business Target is under conditions)

**viii. Investment Promoting Officer (IPO) – 50**

Required Educational Qualification : Advanced Level Completion
Experience : Minimum one year experience at the marketing strategy.
Salary Scale : Rs. 102,500.00 Per Month
Basic : 37,500/- , Allowance - 65,000/-
(Business Target is under conditions)

**2. In Mannar District**

At the beginning there is a Branch Office of the company would be established this year (2026) in the Mannar District and for the branch office, particular staff are going to be recruited as listed below.

**B. MANNAR TOWN BRANCH**

**i. Branch Manager (BM) or Investment Promoting Manager (IPM) – 01**

Required Educational Qualification : Degree Holder in Commerce / Manage ment or Diploma in Business Management OR
Experience : Minimum 05 Years working experience at Managing Level at any institution or company.
Salary Scale (Per BM): Rs. 350,000.00 Per Month
Basic - 85,000/-, Allowance - (For Vehicle -150,000/-, For Fuel - 115,000/-)
(Business Target is under conditions)

**ii. Accountant – 01**

Required Educational Qualification: Degree Holder in Commerce or Diploma in Accounting.
Expected working Experience: Minimum 3 years at the related field.
Salary Scale: Rs. 65,000.00 Per Month
Basic: 52,500/-, Travel Allowance - 12500/-

**iii. Admin Officer – 01**

Required Educational Qualification: Diploma in Administration or Advanced Level.
Expected working experience: Minimum 2 years experience
Salary Scale: Rs. 57,500.00 Per Month
Basic: 45,000/-, Travel Allowance - 12,500/-

**iv. Human Resource Officer (HR Officer) – 01**

Required Educational Qualification: Diploma in HR Management or related field.
Expected working experience: Minimum 3 Years experience
Salary Scale: Rs. 75,000.00 Per Month
Basic: 62,500/-, Travel Allowance: 12,500/-

**v. Office Assistant – 02**

Required Educational Qualification: Advanced Level Completion
Salary Scale: Rs. 52,500.00 Per Month
Basic: 40,000/-, Travel Allowance: 12,500/-

**vi. Investment Promoting Group Leader (IPGL) – 02**

Required Educational Qualification: Advanced Level Completion or above.
Experience : Minimum two years experience at the marketing strategy.
Salary Scale : Rs. 165,000.00 Per Month
Basic – 47,500/- , Allowance:
(for Vehicle- 80,000/- For Fuel – 37500/-)
(Business Target is under conditions)

**vii. Investment Promoting Officer (IPO) – 10**

Required Educational Qualification : Advanced Level Completion
Experience : Minimum one year experience at the marketing strategy.
Salary Scale : Rs. 102,500.00 Per Month
Basic : 37,500/- , Allowance - 65,000/-
(Business Target is under conditions)

**3. In Mullaitivu District**

There are two Branch Offices of the company would be esta blished this year (2026) in the Mullaitivu District and for the branch offices, particular staff are going to be recruited as listed below.

**C. MULLAITIVU BRANCH AND PUTHUKKUDIYIRUPPU BRANCH**

**i. Branch Manager (BM) or Investment Promoting Manager (IPM) – 02**

Required Educational Qualification : Degree Holder in Commerce / Management or Diploma in Business Management OR
Experience : Minimum 05 Years working experience at Managing Level at any institution or company.
Salary Scale (Per BM): Rs. 350,000.00 Per Month
Basic - 85,000/-, Allowance -
(For Vehicle -150,000/-, For Fuel - 115,000/-)
(Business Target is under conditions)

**ii. Accountant – 02**

Required Educational Qualification: Degree Holder in Commerce or Diploma in Accounting.
Expected working Experience: Minimum 3 years in the related field.
Salary Scale: Rs. 65,000.00 Per Month
Basic: 52,500/-, Travel Allowance - 12500/-

**iii. Admin Officer – 02**

Required Educational Qualification: Diploma in Administration or Advanced Level.
Expected working experience: Minimum 2 years experience
Salary Scale: Rs. 57,500.00 Per Month
Basic: 45,000/-, Travel Allowance - 12,500/-

**iv. Human Resource Officer (HR Officer) – 02**

Required Educational Qualification: Diploma in HR Management or related field.
Expected working experience: Minimum 3 Years experience
Salary Scale: Rs. 75,000.00 Per Month
Basic: 62,500/- Travel Allowance: 12,500/-

**v. Office Assistant – 04**

Required Educational Qualification: Advanced Level Completion
Salary Scale: Rs. 52,500.00 Per Month
Basic: 40,000/-, Travel Allowance: 12,500/-

**vi. Investment Promoting Group Leader (IPGL) – 04**

Required Educational Qualification: Advanced Level Completion or above.
Experience : Minimum two years experience at the marketing strategy.
Salary Scale : Rs. 165,000.00 Per Month
Basic – 47,500/- , Allowance: (for Vehicle- 80,000/- For Fuel – 37500/-) (Business Target is under conditions)

**vii. Investment Promoting Officer (IPO) – 20**

Required Educational Qualification : Advanced Level Completion
Experience : Minimum one years experience at the marketing strategy.
Salary Scale : Rs. 102,500.00 Per Month
Basic : 37,500/- , Allowance - 65,000/-
(Business Target is under conditions)

The talented applicants can send their applications with relevant and necessary documents including proper prepared Curriculum Vittae (CV), Certificates of Educational and experiences and GS character by registered post to the address of the company's Regional Head Office given below on or before 20th of Feb, 2026 and should be written detail of applied posting very clearly on the top left corner of the envelope.

**POSTAL ADDRESS OF THE ORGANIZATION**

**Chief Executive Director (CED) / Managing Director (MD), Northern Lanka Dairy Farm and Agro Ventures (Pvt) Ltd.**
**Regional Head Office,**
**No - 12, New Kachcheri Road, kilinochchi. Srilanka.**

**NOTE: As soon as possible, the Selected applicants will be informed before end of Feb, 2026 for their interview after completion of applications process.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





## பொய்யாமொழி

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்**

**பொருள்:** செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்ய வல்லவரே பெரியோர். செய்வதற்கு அரிய செயல்களைச் செய்யமாட்டாதவர் சிறியோர்.


# சீனத்தின் பிடியில்...!

ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியில், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் சடுதியாக அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, பிராந்தியப் பாதுகாப்பு என அனைத்துத் துறைகளிலும், இலங்கை தன்னைச் சார்ந்து சுழன்று கொண்டிருக்கக்கூடிய வகையிலேயே சீனா அண்மைக்காலமாக காய்களை நகர்த்தி வருகின்றது. 'பெட்ரோ-டொலர்' மீண்டும் உலக ஒழுங்கை ஆட்டிப்படைக்க ஆரம்பித்திருக்கும் நிலையில், தெற்காசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு இலங்கையுடனான உறவுகளை இந்தியா வலுப்படுத்த எத்தனிக்கும் பின்னணியில், சீனாவின் எண்ணெய் நிறுவனங்களின் பிரதான செயற்பாட்டுக்களமாக இலங்கையைப் பயன்படுத்த அனுமதித்துள்ளது அநுர அரசு. உலகில் தற்போது நிலவும் காலச்சூழலில் இது அவ்வளவு நேர்த்தியான அணுகுமுறை அல்ல.

சீன இராஜதந்திர நகர்வுகளின் உச்சக்கட்டமாக, இலங்கையின் பௌத்த உயர்பீடங்களை இலங்கைக்கான சீனத்தூதுவர் சென்கொங் சந்தித்ததுடன், இலங்கைக்கு எத்தனை தடவைகளேனும் உதவி வழங்குவதற்குச் சீனா தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளார். இலங்கையின் உள்ளக நிலைமைகளை அறிந்து, அதற்கேற்ப சீனம் காய்நகர்த்துகின்றது என்பதற்கு இதுவே சான்று. அத்துடன், இலங்கையின் சமகால அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய நபராகவே சீனத்தூதுவர் சென்கொங் இருந்து வருகின்றார். பருத்தித்துறை முனைப்பகுதி வரை சென்று, 'இங்கிருந்து இந்தியா எத்தனை கிலோமீற்றர் ?' எனக் கேட்டமை, தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தியினருக்குக் கிடைத்த ஆதரவு காரணமாக பெருமை பேசியமை, விஜேராமவில் இருந்து மஹிந்த வெளியேறியபோது அவரை நேரில் சந்தித்தமை என பல்வேறுபட்ட சர்ச்சைகள் சீனத்தூதுவரால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாகவே இலங்கையின் பௌத்த உயர் பீடங்களுடனான அவருடைய அண்மைக்காலச் சந்திப்பையும் குறிப்பிடலாம்.

கடந்த அரசாங்கங்களின் ஆட்சியிலும் வல்லாதிக்க சக்திகளின் ஆதிக்கங்கள் அவ்வப்போது இருந்தன. ஆனால், 'இலங்கை ஒரு அணிசேரா நாடு' என்ற கொள்கையில் இருந்து அவை வழுவாதிருந்தன. அத்தகைய இராஜதந்திர நகர்வுகள் தற்போது கைவிடப்படுகின்றனவா? என்ற சந்தேகம் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் வலுவாகவே எழுகின்றது. இந்தியாவுக்கு எதிராக எந்தவொரு நாடும் இலங்கையைப் பயன்படுத்த அனுமதிக்கோம் என்று ஜனாதிபதி அநுரவும், தேசிய மக்கள் சக்தியினரும் பலமுறை கூறியிருக்கின்றனர். இந்த வாக்குறுதியை அநுர அரசாங்கம் காப்பாற்ற வேண்டும். அத்துடன், இலங்கையின் இருப்பையும், இலங்கையின் நலன்களையும் முற்றாக உறுதிப்படுத்த வேண்டும்.

சீனம் ஓர் ஆபத்தான பூதம். அது ஒருநாட்டை கடன்களாலும், முதலீடுகளாலும் மீள முடியாத வகையில் அரித்து உண்ணும். இதற்கு ஏராளமான ஆசிய - ஆபிரிக்க நாடுகள் உதாரணங்களாக உள்ளன. ஆதலால், இலங்கை மீதான சீனாவின் முதலீடுகள், உண்மையில் இலங்கையின் நலன்களை மையப்படுத்திய திட்டங்கள்தானா என்பதை அரசாங்கம் உறுதிப்படுத்துவது அவசியமானது.




## மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்தவேண்டும்



### சுவிஸ் தூதுவர் வலியுறுத்து

**கொழும்பு, ஜன.26**

**இலங்கையில் நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல ஆண்டுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இன்றி முடங்கியுள்ள மாகாணசபைகளை மீண்டும் செயற்றிறன்மிக்கவையாக மாற்றத் தேர்தல்கள் மிக அவசியம். நிர்வாகத்தைப் பிராந்தியங்களுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்வதற்கும், பல்லினச் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கும் மாகாணசபை முறைமை முக்கியமானது. இலங்கை தற்போது பரிசீலித்து வரும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள், மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தையோ அல்லது நியாயமான சிவில்விமர்சனங்களையோ முடக்கும்வகையில் அமையக்கூடாது. - என்றார். (ச-இ)

## 'குஷ்' போதையுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன.26
கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் 'குஷ்' ரக போதைப்பொருளுடன் இலங்கையர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவரிடமிருந்த இரண்டு பயணப்பைகளுக்குள் 8 பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 8 கோடியே 22 இலட்சம் ரூபா பெறுமதியுடைய 8 கிலோகிராம் 220 கிராம் எடையுடைய 'குஷ்' போதைப்பொருள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-இ)



## சுற்றிவளைப்பு 524 பேர் கைது

கொழும்பு, ஜன.26
நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் மூலம் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் 524 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 256 பேரையும், பகிரங்கப் பிடியாணை உத்தரவு வழங்கப்பட்டிருந்த 200 பேரையும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 429 சாரதிகளையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ச-இ)

## நாடாளுமன்ற பிரதிச்செயலர் பணிநீக்கம்

நாடாளுமன்றத்தின் பணிக்குழாம் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான ஜீ.கே.ஏ. சமிந்த குமார குலரத்ன உடனடியாக நடைமுறைக்குவரும்வகையில் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார். அவரது நியமனம் தொடர்பாக எழுந்துள்ள சில சர்ச்சைக்குரிய விடயங்கள் மற்றும் சிக்கல்களைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## இணையவழி மோசடிகள் கடந்தாண்டு 318 பேர் கைது

கடந்த 2025ஆம்ஆண்டில் இணையவழி மோசடிகள் தொடர்பில் 318 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில் 2,000க்கும் அதிகமான சைபர் குற்றங்கள் பதிவாகியுள்ளன. இந்த சைபர் குற்றவாளிகளின் இலக்காக நாட்டின் இளம் சமூகத்தினர் மற்றும் முதியவர்கள் மாறியுள்ளனர். அத்துடன் இணையத்தளத்துக்குப் புதிதாகப் பிரவேசிப்பவர்களும் இந்தக் குற்றவாளிகளின் இலக்காகியுள்ளனர். இதுதொடர்பில் அவதானத்துடன் செயற்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரச பணியாளர்கள்

## பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.26
சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி பொலிஸ் நிலையம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் பொங்கல் பெருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ச-9)

## நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.26
இடைக்காடு மகாவித்தியாலய நூற்றாண்டு விழா இன்று திங்கட்கிழமை கல்லூரி வளாகத்தில் காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் கு.அகிலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஆரம்பப் பிரிவு கட்டட நன்கொடையாளர்கள் சார்பில் திரு. திருமதி சிவகுமார் சியாமளா, முகப்பு வளைவு நன்கொடையாளர்கள் திரு. திருமதி சிறிசத்தியானந்தம் அரியதவமலர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

## ஆக்கத்திறன்போட்டியில் யாழ். கவிஞர் முதலிடம்!


யாழ்ப்பாணம், ஜன.26
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் அரச உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கவிஞர் தம்பித்துரை ஐங்கரன் தேசியமட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளார்.
மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் பணியாற்றும் இவர் பாடலாக்கத்தில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றதுடன் சிறுகதை ஆக்கத்தில் ஆறுதல் பரிசையும் தனதாக்கியுள்ளார். அலரிமாளிகையில் அண்மையில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் அவருக்கான விருது வழங்கப்பட்டதுடன் காசோலைப் பரிசும் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-159)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.26
மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.20 மணிக்கு இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கர்மாரம்பம் மற்றும் நாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகும்.
மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணி முதல் எண்ணெய்க்காப்பு இடம்பெறும். தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெற்று பூர்த்தி நாளன்று 108 சங்காபிஷேகம் இடம்பெறும். (க)

## கதகளி, மோகினி ஆட்டம் சாவகச்சேரியில் நாளை

யாழ்ப்பாணம், ஜன.26
தென்னிந்திய கலைஞர்களின் கதகளி மற்றும் மோகினி ஆட்டம் ஆகியவை நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளன. சாவகச்சேரி நகரசபையும் இந்திய-யாழ்.துணைத் தூதரகமும் இணைந்து இந்த ஆற்றுகைகளை நடத்துகின்றன.
நகரசபைத் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் ஆற்றுகை நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக இந்தியத் துணைத் தூதரக யாழ். துணைத்தூதுவர் சாய்முரளி கலந்துகொள்வார். (ச-9)





## யாழ். பல்கலையில் பொங்கல் விழா!

யாழ்ப்பாணம், ஜன.26
யாழ். பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்தில் வியாபார முகாமைத்துவமாணி வெளிவாரி 3ஆம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா நேற்று இடம்பெற்றது.
பொங்கல் நிறைவுற்றதும் சூரியனுக்கு படையல் வைத்து, பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-27)

தேசிய இலக்கிய விழா

## புதுக்கவிதைப் போட்டியில் வவு.மாணவி இரண்டாமிடம்

வவுனியா, ஜன.26
தேசிய இலக்கிய விழாவை முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட புதுக்கவிதைப் போட்டியில், வவுனியா சின்னடம்பன் பாரதி வித்தியாலய மாணவி செந்தில்குமரன் தமிழருவி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ச-110)



## பாற்குடப்பவனி

யாழ்ப்பாணம், ஜன.26
தைப்பூச தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திலிருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலை நோக்கிய பாற்குடப்பவனி எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (ச-159)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செலவுகளைச் சமாளிக்கத்தேவையான பணம் இருப்பதால் மகிழ்ச்சியாகக் காணப்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள்வகையில் சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. தந்தைவழியில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். கணவன்– மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அரசாங்கக் காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகேமுடியும். சகோதரர்கள் உங்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தாயின் ஆலோசனைப்படி செயற்படுவது நன்மை தரும். இன்று கிடைத்துவிடும் என்று எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேற்றுமை நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு உகந்த நாள். எதிரிகள் வகையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மறையும்.

**விருச்சிகம்:** இன்று எதிலும் பொறுமை அவசியம். சகோதரர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளினால் மட்டுமே ஓடும் பேருந்து அந்தரிக்கும் அனலைதீவு மக்கள்!

## அதிகாரிகள் அசமந்தம்



**யாழ்ப்பாணம்,ஜன.26**

**யாழ். மாவட்டத்தின் அனலைதீவு மக்கள் முறையற்ற உள்ளூர்ப் போக்கு வரத்துச் சேவையால் நாளாந்தம் சொல்லொணாத் துயரங்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அனலைதீவு இறங்குதுறையிலிருந்து பாடசாலைகள், மருத்துவமனை மற்றும் அரச அலுவலகங்களுக்குச் செல்லும் மக்களின் ஒரே நம்பிக்கையாக இருக்கும் இ.போ.ச பேருந்து தற்போது வீதியில் ஓட முடியாத நிலையில் உள்ளது.

வாரத்தில் சில நாள்கள் மட்டுமே இயங்கும் இந்தப்பேருந்து, ஏனைய நாள்களில் வீதியோரம் பழுதடைந்து நிற்கின்றது.

பயணத்தின்போது திடீரென நின்றுவிடும் இந்தப் பேருந்தை, பயணிகள் இறங்கித் தள்ளினால் மட்டுமே மீண்டும் இயக்கமுடிகின்றது.

பேருந்தின் ஜன்னல்கள், பின் கண்ணாடி மற்றும் அடித்தட்டுக்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதனால் வீதிப் புழுதியும், டீசல் புகையும் பேருந்தினுள் நேரடியாகப் புகுவதால், பயணிகள் மூக்கைப் பொத்தியவாறே பயணம் செய்யவேண்டியுள்ளது. சேதமடைந்த இருக்கைகளாலும், உட்புகும் புழுதியாலும் பயணிகளின் ஆடைகள் அழுக்கடைகின்றன. அலுவலகம் செல்லும் உத்தியோகத்தர்களும் மாணவர்களும் இதனால் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். புதிய பேருந்து வழங்கப்படும் எனப் பதவிக்குவரும் அதிகாரிகள் மற்றும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் காலத்திற்குக் காலம் வாக்குறுதி அளிக்கின்றனரே தவிர, இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அனலைதீவு மக்கள் கவலை தெரிவித்துள்ளார். (ச)



# மாங்குளம் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்குவதற்குத் திட்டவரைவு

## முல்லையில் விசேட கலந்துரையாடல்

முல்லைத்தீவு,ஜன.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் மையப்புள்ளியாகத் திகழும் மாங்குளம் பேருந்து நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்காக புதிய திட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபையால், தயாரிக்கப்பட்ட திட்டவரைவு தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் தற்போது போதிய அளவில் பயன்படுத்தப்படாமல் உள்ள மாங்குளம் பேருந்து நிலையம் மற்றும் வர்த்தக நிலையங்களை முழுமையான பயன்பாட்டுக்குக் கொண்டு வருதல், பேருந்து நிலையத்துக்கான பிரத்தியேகப் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை இணைக்கும் வீதிகளை அமைத்தல், எதிர்காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் உள்ளூர்ப் பேருந்துச் சேவைகளை மாங்குளத்தை மையப்படுத்தி வினைத்திறனாக ஒருங்கிணைத்தல் என்பன குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் திட்ட முன்மொழிவை முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து, அங்கீகாரத்தைப் பெறுமாறு ஆளுநர் அதிகாரிகளுக்குப் பணிப்புரைவிடுத்தார். (சு-27)

**வேலையாட்கள் தேவை**

**மேசன் (வேதனம் - 4000/-)**

**கூலி (வேதனம் - 3000/-)**

தொடர்புகளுக்கு:-

**075 203 9589**

# மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 03 . 1939

மறைவு 25 . 01 . 2026

**கந்தையா பத்திநாதன் (சுந்தரண்ணை)**

**(முன்னாள் பொருட்கொள்வனவாளர் வலி கிழக்கு வடபகுதி ப.நோ.கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி)**

நீர்வேலி தெற்கை பிறப்பிடமாகவும், யார்வத்தை கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்திநாதன் (சுந்தரண்ணை) அவர்கள் நேற்று (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்திநாதன் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கிருஷாந்தினி (சுவிஸ்), ஜெயந்தினி (ஆசிரியர் - சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை), திருமகள் (லண்டன்), பாலசுந்தரம் (கனடா), டயானி (கனடா), அமிர்தாசினி (ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெகநாதன் (சுவிஸ்), வரதராஜன் (முன்னாள் முகாமையாளர் வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூட்டுறவு சங்கம்), தவரூபன் (லண்டன்), சசிகலா (கனடா), நித்தியானந்தன் (கனடா), வாகீசன் (ஆசிரியர், யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனுயா, ஜெகீர்த்தன், திவாகரன், கிரிஷிகா, யதுசன், நிதர்சன், அபிஷனா, துஷன், டனுஷன், பிருத்திகா, கானுஜன், பவியன், பிரனித் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்ற இராமநாதன், சிதம்பரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2026) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 223 2318**

**யார்வத்தை,**
**கோப்பாய் வடக்கு.**

(CS/31090) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 09 . 1946

மறைவு 25 . 01 . 2026

**திரு. சங்கரப்பிள்ளை பேரின்பநாயகம்**

**(ஓய்வூதியர் - பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம், பிரபல சிங்களஆசிரியர்)**

பாண்டிருப்பு, கல்முனையை பிறப்பிடமாகவும், கலைமகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு சங்கரப்பிள்ளை பேரின்பநாயகம் அவர்கள் நேற்று (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மூத்த மகனும், திரு திருமதி பொன்னுத்துரை - உமையவல்லி தம்பதியினரின் மருமகனும், புவனேஸ்வரியின் (ஓய்வூதியர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், யுகவதி (ஓய்வூதியர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), பத்மநாதன் (ஓய்வூதியர் - மாநகரசபை, யாழ்ப்பாணம்), பவானியம்மா, ரவீந்திரநாதன், உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும், ரஜி (ஆசிரியர் - யாழ் இந்து மகளிர் கல்லூரி), விஜி (அபிவிருத்தி உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்), சஜி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட நில அளவை அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேந்திரன் (கணனி தொழில்நுட்பவியலாளர் - உரிமையாளர் PCSK), கேதீஸ் (Top Music) ஆகியோரின் மாமனாரும், துசாரா, டெய்சியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2026) திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணியளவில் இல 29, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 29, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

(CS/31094) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் அமைதி வாரியம்
# சீனா மறுப்பு; இஸ்ரேல் இணைவு

## சர்வதேச அரங்கில் பிளவு

வொஷிங்டன்,ஜன.26

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் சர்வதேசப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், காசா புனரமைப்புப் பணிகளை மேற்பார்வையிடவும் உருவாக்கப்பட்ட 'அமைதி வாரியத்தில்' (Board of Peace) இணைவது குறித்து உலக நாடுகள் மத்தியில் பெரும் பிளவு ஏற்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் இணைவதற்கான அழைப்பை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், சீனா அதனை அதிகாரபூர்வமாக நிராகரித்துள்ளது.

சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றுவரும் உலகப் பொருளாதார மன்ற மாநாட்டின் இடையே விடுக்கப்பட்ட இந்த அழைப்பை நிராகரிப்பதாகச் சீனா அறிவித்துள்ளது.

"சர்வதேசச் சூழல் எவ்வாறு மாறினாலும், ஐக்கிய நாடுகள் சபையை மையமாகக்கொண்ட சர்வதேசக் கட்டமைப்பையே சீனா ஆதரிக்கும்" எனச் சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மறுபுறம், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்த வாரியத்தில் உறுப்பினராக இணையச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

காசா போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ட்ரம்பின் 20 அம்சத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக இந்த வாரியம் செயற்படும் நிலையில் போர்க்குற்றச்சாட்டின் கீழ் நெதன்யாகுவுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் அவர் இந்த அமைதிச் சபையில் இணைந்திருப்பது சர்வதேச அளவில் விவாதங்களைக் கிளப்பியுள்ளது.

இதேவேளை இந்த வாரியத்தில் இணையச் சுமார் 60 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் இது குறித்து இன்னும் உறுதியான முடிவை அறிவிக்கவில்லை. (ச-இ)



# உலக சுகாதார அமைப்பிலிருந்து விலகியது அமெரிக்கா

வொஷிங்டன்,ஜன.26

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம், உலக சுகாதார அமைப்பிலிருந்து (WHO) அமெரிக்காவை உத்தியோகபூர்வமாக விடுவித்துள்ளது.

அத்துடன், அந்த அமைப்புக்குச் செலுத்தவேண்டிய எஞ்சிய நிலுவைத்தொகையை வழங்கவும் அமெரிக்கா திட்டவட்டமாக மறுத்து விட்டது.

நோய்கள் பரவுவதைத் தடுப்பதிலும், தகவல்களைப் பகிர்வதிலும் உலக சுகாதார அமைப்பு பெரும் தோல்வியடைந்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது.

2025 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற முதல் நாளிலேயே, இந்த விலகல் நடவடிக்கையை ட்ரம்ப் நடைமுறைப்படுத்தினார்.

உலக சுகாதார அமைப்புக்கு ஏற்கனவே தேவையற்ற முறையில் அதிக நிதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறி, நிலுவைத் தொகையைச் செலுத்த அமெரிக்கா மறுத்து வருகிறது. விலகுவதற்கு முன்னதாக நிலுவையைச் செலுத்தவேண்டும் என்பது கட்டாயச் சட்டமல்ல என்று அமெரிக்க அதிகாரிகள் வாதிடுகின்றனர். உலக சுகாதார அமைப்பின் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 18% நிதியை அமெரிக்காவே வழங்கிவந்தது. மிகப்பெரிய நன்கொடையாளர் விலகியதால், அந்த அமைப்பு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது.

அதன்படி இந்த ஆண்டின் நடுப்பகுதிக்குள் ஊழியர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பகுதியை (25%) குறைக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பல்வேறு சுகாதாரத் திட்டங்களைச் சுருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை உலக சுகாதார அமைப்பு மட்டுமன்றி, ஐக்கிய நாடுகள் சபையின் 31 அமைப்புகள் உட்பட மேலும் 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து உத்தியோகபூர்வமாக விலக ஜனாதிபதிட்ரம்ப்தீர்மானித்துள்ளமை சர்வதேச அரசியலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இனிமேல் சர்வதேச அமைப்புகளை நம்பியிருக்காமல், நோய் கண்காணிப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையிலான பணிகளுக்காக ஏனைய நாடுகளுடன் நேரடியாக இணைந்து செயற்படப் போவதாக அமெரிக்க சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (ச)

# சிறையில் மலர்ந்த காதல்
## கொலைக்குற்றவாளிகள் திருமணம்

புதுடில்லி,ஜன.26

இந்தியாவின், ராஜஸ்தான் மாநிலத்தில் வெவ்வேறு கொலை வழக்குகளில் ஆயுள் தண்டனை பெற்ற இருவர் சிறையில் ஏற்பட்ட காதலால் பிணையில் வெளிவந்து திருமணம் செய்துள்ளனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு நபரொருவரைக் கொலை செய்து சூட்கேஸில் அடைத்து வீசிய வழக்கில் பெண்ணும், கடந்த 2017ஆம் ஆண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரைக் கொலை செய்த வழக்கில் ஆணும் கைதுசெய்யப்பட்டனர். இந்த வழக்குகளில் இவர்கள் இருவருக்கும் 2023ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். திறந்த வெளிச் சிறையில் தண்டனை அனுபவித்து வந்தபோது இருவருக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு காதலாக மாறியுள்ளது. இருவரும் திருமணம் செய்துகொள்ளமுடிவெடுத்து பிணை கோரி விண்ணப்பித்தனர். ராஜஸ்தான் மேல்நீதிமன்ற உத்தரவின்படி இவர்களுக்கு 15 நாள்கள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. சிறையிலிருந்து வெளியே வந்த இருவரும், திருமணம் செய்து கொண்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச-இ)



# சீனாவுடன் ஒப்பந்தம் கனடாமீது வரிப்போர்
## ட்ரம்ப் எச்சரிக்கை

வொஷிங்டன், ஜன.26

கனடாப் பிரதமர் மார்க் கார்னி சீனாவுடன் அறிவிக்கப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தினால் கனடா மீது 100 சதவீத வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

கனடா அமெரிக்காவுக்குள் சீனப் பொருள்களை அனுப்பும் 'டிராப் ஒப் போர்ட்' ஆக மாறினால் அது ஏற்றுக்கொள்ளமுடியாதது.

மேலும், சீனாவுடன் ஒப்பந்தம் மேற்கொண்டால் கனடாவிலிருந்து வரும் அனைத்து பொருள்களுக்கும் உடனடியாக 100% வரி விதிக்கப்படும் என்றும் ட்ரம்ப் கூறினார். (ச)

# ஓய்வுபெற்றார் சுனிதா வில்லியம்ஸ்

வொஷிங்டன்,ஜன.26

விண்வெளித் துறையில் புகழ்பெற்ற பெண்களில் ஒருவரான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

நாசாவில் 27 ஆண்டுகள் பணியாற்றிய சுனிதா வில்லியம்ஸ், மூன்று பயணங்களில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 608 நாள்கள் செலவிட்டுள்ளார்.

சுனிதா வில்லியம்ஸ் கடந்த டிசெம்பர் 27, 2025 அன்று அதிகாரபூர்வமாக ஓய்வு பெற்றதை நாசா வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சுனிதா வில்லியம்ஸின் முதல் விண்வெளிப்பயணம் 2006ஆம்ஆண்டில் நடந்தது. கடந்த 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் போயிங்ஸ்டார்லைனர் விண்கலத்தின் சோதனை ஓட்டத்திற்காக புட்ச் வில்மோருடன் சுனிதா வில்லியம்ஸ் விண்வெளிக்குச் சென்றிருந்தார். முதலில் இது வெறும் 8 நாள்கள் பயணமாகவே திட்டமிடப்பட்டது. எனினும், விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, அவரது பயணம் ஒன்பது மாதங்களாக நீண்டது. இறுதியில், 2025 மார்ச் மாதம் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் மூலம் அவர் பாதுகாப்பாகப் பூமிக்குத் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காணி விற்பனைக்கு உண்டு
யாழ். கொக்குவில் பகுதியில்
உள் வீதி அருகில்
2 பரப்பு 4 குளி காணி
விற்பனைக்கு உள்ளது.
பிரித்து எடுக்க முடியும்.
தொடர்புகளுக்கு:-
077 282 8175

# மீளமைப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் படுதோல்வி!

மக்கள் தொழில் வல்லுநர் மையம் தெரிவிப்பு

டித்வா அனர்த்தத்தின் பின்னரான மீளமைப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாக மக்கள் தொழில் வல்லுநர் மையம் தெரிவித்துள்ளது.


புயல் மற்றும் நிலச்சரிவினால் வீடுகளை இழந்தவர்களுக்கு அரசாங்கம் 50 இலட்சம் ரூபா இழப்பீடு அறிவித்துள்ளது. ஆனால், மலையக மக்களுக்கு நில உரிமை இல்லாத காரணத்தால், அவர்களால் இந்த இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியாத சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் சிவப்பு வலயங்களாக அறிவித்துள்ள பகுதிகளுக்கே மக்களை மீண்டும் செல்லுமாறு அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். தோட்டத் தொழிற்சாலைகளில் தங்கியுள்ள மக்களை வெளியேற்ற இத்தகைய ஆபத்தான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. 200 வருடங்களாக இந்நாட்டில் வாழும் மலையகத் தமிழ் மக்கள் இன்றும் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே

புறக்கணிக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. பாதிக்கப்பட்ட சிறு வர்த்தகர்களுக்கோ அல்லது சேதமடைந்த பாடசாலைகளுக்கோ முறையான நிவாரணத் திட்டங்கள் எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

AYRIN பழைய கணனி உதிரிப்பாகங்கள் வாங்கப்படும்.
Hard Disk, Mother Board, Processor,CD Ram
Power Suplay, UPS, Housing, Phone Board
இடம்:- ஐந்து சந்தி நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:-
075 846 2405, 077 846 2405

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 06 . 1953

மறைவு 19 . 01 . 2013

### கனகசுந்தரம் சிவராசா

திதி: பூர்வபக்க அட்டமி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பதின்மூன்று ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கோயிலாமனை,
கொடிகாமம். (CR/46961) J-1 குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி.முத்தையா பரமேஸ்வரி

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும்
டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட
**திருமதி. முத்தையா பரமேஸ்வரி**
அவர்கள் 23.01.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலம்சென்ற முத்தையாவின்
அன்பு மனைவியும் ஆவார்.

**இறுதிக் கிரிகைகள் பற்றிய விபரம்
பின்னர் அறியத்தரப்படும்.**

தகவல்
மகாசிவபாலன் (இராசன்)
டென்மார்க் CS/31088 GD

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 11 . 1930

மறைவு 22 . 01 . 2026

### பஸ்தியாம்பிள்ளை வில்லியம் கொலின்ஸ்

ஊர்காவற்றுறை மேற்கை பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாவும் கொண்ட பஸ்தியாம்பிள்ளை வில்லியம் கொலின்ஸ் (CHIEF TELEGRAM MASTER) அவர்கள் 22.01.2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற உபகார நீற்றம்மா (ராணி) அவர்களின் அன்பு கணவரும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சவிரிமுத்து, நீக்கிலஸ் ஆகியோரின் அன்பு சகோதரரும், ஜெயந்தி, றொயிஸ் , அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ் (Parish Priest, OLGH Tamil Parish,Toronto, Canada), நீற்றா, சுரேஸ் குமார், காலஞ்சென்ற குயின்ரஸ், மற்றும் டெலிற்றா ஆகியோரின் பாசமிகு பப்பாவும், காலஞ்சென்ற சிலுவைமுத்து (அன்ரன்), மற்றும் அனன்சியா, நோயல், சஜானா, ஜோதி, றொஷான் ஆகியோரின் அன்பு மாமனாரும், மெலோணி, மெலோன், மயோ, அனிசன், அனோஜினி, அமலினி, ஜொய்லின், ஷெருலின், இவாஞ்சலின், சமந்தா, லினோ, லியோன், அரோன் ஆகியோரின் அன்பு பேரனும், ஏவா, நிலா, அலையா, அர்ஜன், ஹெமில்டன் ஆகியோரின் அன்பு பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 27.01.2026 செவ்வாய்க்கிழமை ஜெயரட்ன மலர்ச்சாலையில் (BORELLA) அஞ்சலிக்காக (8AM-8PM) வைக்கப்பட்டு நாளை மறுதினம் 28.01.2026 புதன்கிழமை மாலை 2.00 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியஸ் பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பொரளை கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

தகவல்:
அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ்
076 159 9214
நீற்றா 077 131 2546

B3 F 14 புளூமெண்டால் தொடர்மாடி,
கொழும்பு - 13. (CS/30920) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 11 . 1968

மறைவு 18 . 01 . 2026

### முத்துக்குமாரு சிவநாதன்

யாழ். வழக்கம்பரை தொல்புரம் சுழிபரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Drancy ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சிவநாதன் அவர்கள் 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு மகாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஏகநாதன் (இளைப்பாறிய மாவட்ட நீதிபதி) சகுந்தலாதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், ஜெயந்தி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலா, குணரட்ணம், தேவஞானி, கெங்காதரன் மற்றும் புஸ்பராணி, நகுலேஸ்வரி, தேவராசா கணே-சராசா, கேசவன்,நவராணி,சிவகுமார், சிவமலர் ஆகியோரின் பாசமிகு சகோ-தரரும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் இராசம்மா தம்பதிகளின் பாசமிகு பெறாமகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தையல்நாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, சிதம்பரநாதன், இராசாத்தி, போஜலிங்கம், மற்றும் சிவபாலன், சந்திரிக்கா, சந்திரா, இராமநாதன், விஜிதா, இந்திரா, சிவானந்தராசா, பத்மா, சிறீஸ்கந்தராசா, சிவானந்தா, காலஞ்சென்ற விஜயானந்தா, வருணானந்தா, விஜயபவானந்தா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்,கௌரீஸ்வரி, தவநாயகி, டிலக்ஷா ஆகியோரின் அன்புச் சகலனும்,யசிந்தன், பிரதீபா, தாட்சாயினி, தேவாஜினி, விக்னா, யதுசிகா,யான்சிகா, அஸ்வின், சில்வியா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும்,செல்வானந்தன், தனவதனன், குகானந்தன், அட்சயா, ஆர்னோ, அனிதா, வினிதா, வேர்ஜினி, தினேஸ், தனுஷ், பாமினி, மைதிலி, நளினி, ஜெகநாதன், ஜூலியஸ், ஜூட், சித்தரஞ்சன், சிந்துராரணி, நந்தகோபன், சாயிசங்கர், சாயினி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை (27/01/2026) காலை 9.00 மணியில் இருந்து 12.45 வரை, Villetaneuse Funeral Hall. Seine Saint Denis, Paris இல் நடைபெற இருக்கின்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மைத்துனர் (ஏ.விஜயபவானந்தா)
077 078 3569

(CS/60544)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூரில் வீடு வாங்கலாம் கொழும்பிலோ எட்டாக்கனி!

## அதிரவைக்கும் சந்தைத்தரவுகள்

கொழும்பு,ஜன.26

**சொந்தமாக ஒரு வீடு அல்லது தொடர்மாடிக் குடியிருப்பு வாங்குவதற்கு, உலகிலேயே மிகவும் கடினமான மற்றும் கட்டுப்படியாகாத நகரமாக இலங்கைத் தலைநகர் கொழும்பு தரப்படுத்தப்பட்டுள்ளது.**

2026 ஆம் ஆண்டுக்கான 'Numbeo' சொத்து முதலீட்டு சுட்டெண்ணின் அண்மைக்கால தரவுகளின்படியே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பில் உள்ள வீடுகளின் விலைக்கும் வருமானத்துக்குமான விகிதம் 55.1 ஆகப் பதிவாகியுள்ளது.

உலகெங்கிலும் கண்காணிக்கப்பட்ட 395 நகரங்களில் இதுவே மிக அதிகப்படியான விகிதமாகும்.

இந்த வரிசையில் கொழும்புக்கு அடுத்ததாக நேபாளத்தின் காத்மாண்டு இரண்டாம் இடத்திலும், பிலிப்பைன்ஸின் மணிலா மூன்றாம் இடத்திலும் உள்ளன.

மும்பை மற்றும் சிங்கப்பூர் போன்ற நகரங்களை விடவும் கொழும்பில் வீடு வாங்குவது சாதாரண மக்களுக்கு எட்டாக்கனியாக மாறியுள்ளது.

கொழும்பில் வசிக்கும் ஒரு சராசரி குடும்பத்தின் மாத வருமானத்துக்கும், அங்குள்ள நிலத்தின் அல்லது கட்டடங்களின் விலைக்கும் இடையேயான இடைவெளி அதிகமாக காணப்படுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் ஒருவரின் சராசரி மாத வேதனம் சுமார் 70,452 ரூபாவாகக் காணப்படும் நிலையில், நகரின் மையப்பகுதியில் ஒரு சதுர அடி நிலத்தின் விலை சுமார் 108,442 ரூபாவாக உள்ளது.

அதாவது, ஒரு நபர் தனது ஒரு மாத முழுச் சம்பளத்தைக் கொடுத்தாலும் கூட, கொழும்பு நகரில் ஒரு சதுர அடி நிலத்தைக்கூட வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீடு வாங்குவது கடினமாகியுள்ளதால், மக்கள் வாடகை வீடுகளை நாட வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் வாடகைக் கட்டணங்களும் சடுதியாக அதிகரித்துள்ளன.

கொழும்பு நகரில் ஒரு படுக்கையறை கொண்ட வீட்டின் சராசரி மாத வாடகை ஒரு இலட்சத்து 31,386 ரூபாவாகும். இது ஒரு சராசரி ஊழியரின் மாதச் சம்பளத்தைவிடவும் இருமடங்கு அதிகமாகும்.

அதிகரித்துவரும் சொத்துகளின் விலை மற்றும் வங்கிக்கடன் வட்டி வீதங்கள் காரணமாக, கொழும்பில் நடுத்தர வர்க்கத்தினர் சொந்தமாக வீடு வாங்குவது என்பது புள்ளிவிபர ரீதியாக ஷங்காய், ஹொங்கொங் அல்லது மும்பையை விடவும் கடினமான ஒன்றாக மாறியுள்ளதாக இந்த அறிக்கை சுட்டிக்காட்டிகிறது. (ச)

## இலங்கையின் பாதுகாப்புக்கு துருக்கி அரசால் 'ட்ரோன்கள்'

கொழும்பு,ஜன.26

இலங்கை மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், துருக்கியில் தயாரிக்கப்பட்ட நவீன ஆளில்லா விமானங்கள் மற்றும் பாதுகாப்புத் தளபாடங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு துருக்கி முன்வந்துள்ளது.

இலங்கையிலுள்ள துருக்கியத் தூதுவர் செமி லுட்ஃபு துர்குட் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கடல் எல்லைகளைக் கண்காணிப்பதற்கும், சட்டவிரோதக் கடத்தல்களைத் தடுப்பதற்கும் இந்த ட்ரோன்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்தத் திட்டம் குறித்து இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஏற்கனவே பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இருப்பினும், கொள்முதல் தொடர்பான இறுதிக்கட்ட முடிவுகள் இன்னும் எட்டப்படவில்லை. இது இரு நாடுகளுக்கும் இடையிலான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பின் முக்கியமான மைல்கல்லாகக் கருதப்படும்- என்றார். (ச-இ)



## தெஹிவளை துப்பாக்கிச்சூடு: மேலுமொருவர் கைது


கொழும்பு,ஜன.26

தெஹிவளைப் பகுதியில் 16 வயதுச் சிறுமி மீது துப்பாக்கிச்சூடு நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சந்தேகநபர் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் எனத் தெரியவந்துள்ளது. துப்பாக்கிச்சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட ரிவோல்வர் குறித்த பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. (ச)



யாழ்.நகர புல்லுக்குளத்தில் தேங்கியிருந்த பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப்பொருள்கள் அண்மையில் தூர்வாரப்பட்டு அகற்றப்பட்டன. தமிழ்மக்கள் கூட்டணியின் செயற்பாட்டாளர்களால் இந்தத் துப்புரவுப் பணி நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-66)

## யாழ்.மாநகரசபையின் புதிய கட்டடத் தொகுதியின் கட்டுமானப் பணிகள் தீவிரம்!



யாழ்ப்பாணம்,ஜன.26

நீண்டகாலமாக நிர்மாணிக்கப்பட்டுவரும் யாழ். மாநகரசபையின் புதிய கட்டடத் தொகுதியின் தற்போதைய நிலைமைகளை மாநகர முதல்வர் வி.மதிவதனி தலைமையில் விசேட குழு நேரில் சென்று ஆராய்ந்தது.

இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ள கட்டுமானப் பணிகள், அதற்காகச் செலவிடப்பட்டுள்ள நிதி விபரங்கள் மற்றும் கட்டடத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யத் தேவையான மேலதிக நிதித் தேவைகள் குறித்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் முதல்வருக்கு விரிவான விளக்கமளித்தனர். நிர்மாணப் பணிகளைப் பார்வையிட்ட பின்னர், எஞ்சியுள்ள தொகுதிகளை விரைவாகப் பூர்த்தி செய்வது குறித்து முதல்வர் மற்றும் மாநகர சபை உறுப்பினர்களிடையே விரிவான கலந்துரையாடலும் இடம்பெற்றது. (ச)

## யாழ். பல்கலைக்கழகத்தில் சர்வதேச சட்ட மாநாடு

யாழ்ப்பாணம்,ஜன.26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை மற்றும் இந்தியாவின் பிரசித்திபெற்ற சுரானா மற்றும் சுரானா சட்ட நிறுவனம் ஆகியவை இணைந்து நடாத்தும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு 2026, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. மாநாட்டின் முதல் நாள் அமர்வுகளில் உயர்நீதி மன்ற நீதியரசர் சிதம்பரம் பிள்ளை துரைராஜா மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், நீதியரசர் ரோஹித்த அபேசூரிய ஆகியோர் நீதித்துறை சார்பாகக் கலந்து கொண்டனர். அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி சரண்யா ஹசந்தி உருகொடவத்தே திசாநாயக்க, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீ சாய் முரளி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா, சட்டத்துறையின் தலைவர் திருமதி கோசலை மதன் மற்றும் சட்டத்துறை சார்ந்த விரிவுரையாளர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

சுரானா மற்றும் சுரானா சட்ட நிறுவனத்துடன் இணைந்து 2024 ஆம் ஆண்டில் முதலாவது சட்ட மாநாட்டை நடத்திய யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை, 2025 ஆம் ஆண்டு இரண்டாவது மாநாட்டையும், அதன் தொடர்ச்சியாக மூன்றாவது மாநாட்டை இந்த ஆண்டும் நடத்துகின்றது. (க-27,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மன்னார்- புத்தளம் வீதியை

## மக்கள் பாவனைக்குத் திறக்க கையெழுத்துச் சேகரிப்பு!

மன்னார்.ஜன.26

மன்னாரில் இருந்து இளவன்குளம் ஊடாக புத்தளத்துக்குச் செல்லும் பிரதான வீதியைத் திறக்கக் கோரி, ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கான மனுவில், கையெழுத்துப் பெறும் நடவடிக்கை, மன்னார் பேருந்துத் தரிப்பிடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப் பட்டது. இந்த வீதியைத் திறந்துவிட்டால், மன்னார் மாவட்டத்தில் இருந்து மீனவர்கள் மாத்திரமன்றி அனைவரும் தென்பகுதிக்கான போக்குவரத்தை இலகுவாக மேற்கொண்டு தமது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுவில் மதத்தலைவர்கள்,மீனவ அமைப்பினர்,பொது அமைப்பினர்,பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு கையெழுத்துக்களை இட்டு ஆதரவு வழங்கினர். இதேவேளை இந்த வீதியின் கணிசமான பகுதி வில்பத்து தேசிய சரணாலயத்தின் ஊடாகச் செல்கிறது.

காடுகளின் ஊடாக வாகனங்கள் பயணிப்பதால் வனவிலங்குகளுக்குப் பாதிப்பு ஏற்படும். பாதுகாப்பு மற்றும் சூழல் காரணங்களுக்காக இவ்வீதியூடான போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-56)

### மருத்துவர்கள்...

அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில், தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மீள ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

### மாகாணசபைத்...

மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்றத்தால் புதிதாக நியமிக்க உத்தேசிக்கப்பட்ட குழுவில் முன்னிலையாகி எல்லை நிர்ணயம் தொடர்பான விவரங்களை எடுத்துரைக்க நாங்கள் தயாராகவுள்ளோம். இலங்கையில் தேர்தல் முறைமை சிக்கலுக்குரியதாகவே உள்ளது. தேர்தல் முறைமை தொடர்பில் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுக்கள் மற்றும் தெரிவுக் குழுக்களுக்குப் பல யோசனைகளையும், பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளோம். நாட்டில் கலப்புத் தேர்தல் முறைமையே சிறந்ததாக அமையும் என்று பரிந்துரைகளை முன்வைத்துள்ளோம்.

அரசமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாகாணசபைத் தேர்தலை பல்வேறு காரணிகளால் நடத்தாமல் இருப்பதும், எல்லை நிர்ணய விடயத்தை குறிப்பிட்டுக் கொண்டு மாகாணசபைத் தேர்தல் தொடர்ந்து பிற்போடுவதும் முறையற்றது. 2017ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கையை அரசியல்வாதிகள் முழுமையாகப் பரிசீலனை செய்யாமலே எதிர்த்தார்கள். அப்போதைய சூழலில் நாட்டில் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காணப்பட்டமையே இதற்கு முக்கியமான காரணியாகும்.

மாகாணசபைத் தேர்தலை எந்த தேர்தல் முறைமையில் நடத்துவது என்று ஆராய்ந்து விதப்புரைகள் மற்றும் யோசனைகளை முன்வைப்பதற்கு 12 பேரை உள்ளடக்கிய வகையில் குழு ஒன்றை நியமிக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. எல்லை நிர்ணயம் தொடர்பில் ஆராய்வதற்கு மீண்டும் ஒரு குழுவை நியமித்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றதாகிவிடும். இந்தக் குழுவில் முன்னிலையாகி எல்லை நிர்ணயம் தொடர்பான விவரங்களை எடுத்துரைக்க நாங்கள் தயாராகவுள்ளோம். இந்த விடயத்தில் உண்மைகளை வெளிப்படுத்த எமக்கு வாய்ப்பளிக்க வேண்டும் - என்றார். (அ-எ-இ)

### கிவுல்ஓயாத்திட்டத்தில்...

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிவுல் ஓயா திட்டம், ஒரு இனத்துக்கோ அல்லது சமூகத்துக்கோ எதிரானதாக அல்ல. தேசிய அபிவிருத்தி, விவசாய வளர்ச்சி மற்றும் நீர்வள முகாமைத்துவத்தை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு அரசாங்கத் திட்டம். இந்த ஆட்சியின் கீழ் இனவாதத்துக்கும் மதவாதத்துக்கும் எந்தவிதமான இடமும் இல்லை. அனைத்து மக்களையும் சமமாகக் கருதும் கொள்கையுடனேயே அரசாங்கம் செயற்படுகிறது.

கிவுல் ஓயா திட்டத்தின் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய உற்பத்தி அதிகரிக்கும். ஆயிரக் கணக்கான விவசாயக் குடும்பங்களுக்கு நிலையான நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இந்தத் திட்டத்தை இன அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்காமல், நாட்டின் நீண்டகால அபிவிருத்தித் தேவையாகக் கருதி அணுக வேண்டும்.

வடக்கு, கிழக்கில் எமக்கு ஆதரவு கிடைத்துள்ளது. அதைக் குழப்புவதற்கே காழ்ப்புணர்ச்சியுடன் இப்படியான விசமத்தனமான பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நாங்கள் மக்களுக்கு விரோதமான எந்தத்திட்டங்களையும் முன்னெடுக்க மாட்டோம் - என்றார். (அ-எ-26)

### கிவுல்ஓயா...

அதற்கான முதற்கட்ட நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு தமிழ்க் கட்சிகள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன. இந்தத் திட்டத்தால் வவுனியா வடக்குக்கோ, தமிழ் மக்களுக்கோ பயனேதும் இல்லை என்றும், சட்டவிரோதப் பெரும்பான்மையினக் குடியேற்றங்களுக்காகவே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவை குற்றஞ்சாட்டுகின்றன. ஆயினும் எதிர்ப்புக்களை உதாசீனம் செய்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் தீவிரமாக உள்ளது.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் ஊடாக எதிர்ப்பை வெளிப்படுத்த தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன. இது தொடர்பாக பொது அமைப்புக்களுக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே வவுனியாவில் இன்று கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது. இலங்கைத் தமிழசுக் கட்சியின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்றும், வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### செவ்வந்தியின்...

டுப்புப் பிரிவினர் நீதிமன்றில் சுட்டிக்காட்டினர். அதையடுத்து மேலதிக விசாரணைகளுக்காக அவரை மேலும் 90 நாள் தடுப்பு காவலில் வைக்க நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு சந்தேகநபர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். அவர்களைக் கைது செய்வதற்காகச் சர்வதேச 'சிவப்பு அறிவித்தல்' பிறப்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, நான்கு சந்தேகநபர்கள் நேரடியாக நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். ஏனைய சந்தேகநபர்கள் 'ஸூம்' (Zoom) தொழில்நுட்பம் ஊடாக முன்னிலைப்படுத்தப்பட்டனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களை எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-இ)

### ஆழ்கடலில்...

கொண்ட மற்றொரு படகும் சுற்றிவளைக்கப்பட்டது.

அந்தப் படகுகளில் இருந்து 14 பொதிகள் மீட்கப்பட்ட நிலையில் அவற்றில், 184 கிலோவுக்கும் அதிக ஹெரோய்ன் போதைப்பொருளும், 112 கிலோவுக்கு அதிக ஐஸ் போதைப்பொருளும் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் சான்றுப்பொருள்களுடன் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

### பிரதி...

வதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான போலியான கோரிக்கைகளை நம்பி ஏமாற வேண்டாம் என்றும், அடையாளம் தெரியாத நபர்களிடம் பணத்தையோ அல்லது இரகசியமான தனிப்பட்ட விபரங்களையோ பகிர வேண்டாம் எனவும் பிரதி அமைச்சர் கோரியுள்ளார்.

இவ்வாறான சந்தேகத்துக்கிடமான அழைப்புகள் அல்லது குறுஞ்செய்திகள் கிடைத்தால், உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது உரிய அதிகாரிகளிடமோ முறையிட வேண்டும் என்றும் பிரதி அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (அ-எ-இ)

### நாடாளுமன்ற...

யாகப் பணிநீக்கம் செய்ய நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது. அவரது நியமனம் தொடர்பாக எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து, கடந்த 23ஆம் திகதி முதல் பதவி நீக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பதவிநீக்க நடவடிக்கை உரிய நடைமுறைகள் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நாடாளுமன்றத்தின் பிரதி செயலாளர் நாயகம் எந்த அறிவிப்பும் இன்றி, எந்த ஒழுக்காற்று விசாரணையும் இன்றி பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கை நாட்டின் அரச சேவையின் நேர்மை மற்றும் நிலைத்தன்மைக்கு ஆபத்தான முன்னுதாரணமாக அமையும். அமைச்சர் லால்காந்தா அரச அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்று அண்மையில் கூறியதை நாம் பார்த்தோம். அவர்கள் அரச அதிகாரத்தை கைப்பற்றும் முறை இதுதான் என நான் நினைக்கிறேன் - என்றார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# 'மண்ணின் மறவர்கள்' உதைபந்தாட்டத் தொடர் உடுப்புக்குளம் அலையோசை அணி சம்பியன்

முல்லைத்தீவு,ஜன.26

முல்லைத்தீவு-கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அமரர் தேவராசா பகீரதன் ஞாபகார்த்த 'மண்ணின் மறவர்கள்' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் உடுப்புக்குளம் அலையோசை அணி வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தப் போட்டி நடைபெற்றது.

இந்த இறுதிச்சுற்றில் கோயில் குடியிருப்பு யங்கஸ் விளையாட்டுக் கழக அணியினரும், உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக்கழக அணியினரும் மோதிக்கொண்ட நிலையில் உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக்கழகத்தினர் அபாரமாக விளையாடி வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தனர்.

நிகழ்வில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-246)

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த,பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 632 3554

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதி, 3ம் ஒழுங்கை முகப்புடன் 3 பரப்பு 1 குளி காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நண்ணீரூற்று.
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 400 m தூரம்.
- வீடு, கடை அமைப்பதற்கு உகந்த இடம்.

**தொடர்பு:- 076 860 2770**
**076 987 8617**

(CS 31084) A

# மரண அறிவித்தல்

## திருமதி மோகனாம்பாள் தர்மராஜா
(ஓய்வுபெற்ற முகாமையாளர், லக்சல)



பிறப்பு 23.12.1937 — இறப்பு 25.01.2026

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி மதவடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மோகனாம்பாள் தர்மராஜா அவர்கள் நேற்று (25.01.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மராஜா அவர்களின்' அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, சிதம்பர ஈஸ்வரன், தெய்வேந்திரம், பத்மலட்சுமி, புஸ்பராசா, சாம்பசிவம் மற்றும் கமலவேணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, சண்முகராஜா, ஜீவராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும், செந்தில்குமரன் (ஆசிரியர் யாழ் இந்து மகளிர் கல்லூரி), நந்தகுமரன் (முகாமையாளர் ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), உமையாள் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுஜாதா (ஆசிரியர் யாழ் செங்குந்த இந்துக்கல்லூரி), செல்வ அம்பிகை (விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அஷ்மிதா, அபிராம், குருவரன், தேவந்தி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2026) திங்கட்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 02.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 736 4939, 071 424 6309, 071 982 8308**

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 12 . 1946 — மறைவு 24 . 01 . 2026



## அமரர் ஜெயராணி அம்பலவாணர்
(ஓய்வுநிலை ஆசிரியர் யா/ திருக்குடும்ப கன்னியார் மடம்)

டேவிட் வீதியை பிறப்பிடாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராணி அம்பலவாணர் அவர்கள் நேற்றுமுன்தினம் (24.01.2026) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை - ரோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்வம் தம்பதியரின் அன்பு மருமகளும், அம்பலவாணரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம், நீற்றா, அலெக்சாண்டர், வின்சலோஸ் வின்சன், மேரி மக்ரலின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மதன்குமார், சசிதரகுமாரி, ஜெயந்தன், கவிதாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரதீபா, தயாதரன், சியாமினி, டிலுஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், அஷ்விகா, பிரகதி, ஹிஸ்வின், ஹியூரிஷா, நிதுஷிகன், கைஷான், ஹிருத்தேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் E-Son மலர்சாலையிலிருந்து இன்று (26.01.2026) திங்கட்கிழமை பி.ப 03.00 மணியளவில் யாழ் மரியண்ணை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதித் திருப்பலி பி.ப 04.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

(CS/31091) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.01. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org